மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை.

**முன்னிலை : திரு. நா.சிவபழனி, B.A., B.L**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வக்கோட்டை.**

2025 ம் ஆண்டு ஜுலை மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை

2056 திருவள்ளுவராண்டு விஸ்வாவசு வருடம் ஆடி திங்கள் 01 ம் நாள்

**அசல் வழக்கு எண்.119/2019, இடைமனு எண்.3/2025**

சகாயராஜ் ...மனுதாரர் / வாதி

**//எதிர்//**

இருதயசாமி ...எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 17.07.2025 இன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.B.தமிழ்செல்வன், B.A., B.L.,** அவர்கள் ஆஜராகியும் , எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.A.சித்திரைச்செல்வன், B.Com., B.L.,** அவர்கள் ஆஜராகியும் , எதிருரை தாக்கல் செய்ய போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னரும் , எதிருரை தாக்கல் செய்யப்படாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும் , இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும் , சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் , இதுநாள்வரை என் சீரிய பரிசீலனையில் இருந்து , இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவின் மனுதாரரால் வழக்கு புல எண் .130/18 ஐ வருவாய் ஆவணங்களுடன் ஒப்பீடு செய்து அளந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமித்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9 இன் கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்/ வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:**

2. மனுதாரரால் வழக்கு 'அ' அட்டவணை சொத்திற்கு வழக்கு 'ஆ' அட்டவணை சொத்தை பாதையாக பயன்படுத்தி வருவதை பொறுத்து உரிமை விளம்பல் பரிகாரம் கோரியும், அதன் தொடர்ச்சியாக மனுதாரர் பாதையாக பயன்படுத்தி வருவதை பிரதிவாதியோ அவரது ஆட்களோ தடை செய்யக்கூடாது என நிரந்தர தடையாணை

பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது . வழக்கு அ அட்டவணை சொத்தின் புல எண்ணில் (130/18) கூட்டு பட்டா 32 செண்ட் இடமானது மனுதாரரின் தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாக இருந்து பாக பிரிவினையில் மேற்படி அ அட்டவணை சொத்து மனுதாரரின் தகப்பனாரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு மேற்படி சொத்து மனுதாரரின் தகப்பனாரால் மனுதாரருக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது.

3. மேற்படி சொத்தில் மனுதாரர் வீடுகட்டியுள்ளார் . மேற்படி சொத்திற்கு பாதை பொதுகுடும்பமாக இருந்த பொழுதே கிராம வழக்கப்படி ஒதுக்கப்பட்டுள்ளது . மேற்படி பாதை எதிர்மனுதாரரால் அபகரிக்கப்பட்டுள்ளது . வழக்கு அ அட்டவணை சொத்தும் மேற்படி புல எண்ணில் (130/18) உள்ளடக்கிய இதர சொத்தும் ஒரே குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதையும், மேற்படி பாதையை மற்ற பாகஸ்தாரர்களுடைய இடத்தில் ஓங்கு உரிமை வசதி உரிமை உள்ளது என்பதையும் நிரூபணம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே, மேற்படி புல எண்ணை வருவாய் ஆவணங்களுடன் ஒப்பீட்டு அளவீடு செய்து , சர்வேயர் உதவியுடன் அளந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதற்காக வேண்டி மனுதாரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகிய நிலையில் , எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தால் போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டும் , எதிருரை தாக்கல் செய்யப்படாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

**5. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா?**

6. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் ஏதும் குறியிடப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

7. மனுதாரரின் மனு பரிலீசனை செய்யப்பட்டது . இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். மனுதாரரால் வழக்கு 'அ' அட்டவணை சொத்திற்கு வழக்கு 'ஆ' அட்டவணை சொத்தை பாதையாக பயன்படுத்தி வருவதை பொறுத்து உரிமை விளம்பல் பரிகாரம் கோரியும் , அதன் தொடர்ச்சியாக மனுதாரர் பாதையாக பயன்படுத்தி

வருவதை பிரதிவாதியோ அவரது ஆட்களோ தடை செய்யக்கூடாது என நிரந்தர தடையாணை பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் வழக்கு 'அ' அட்டவணை சொத்தில் 32 செண்ட் இடம் மனுதாரரின் தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாக இருந்து , பாக பிரிவினையின்படி 'அ' அட்டவணை சொத்து மனுதாரரின் தகப்பனாரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு, பின்னர் மேற்படி சொத்து மனுதாரரின் தகப்பனாரிடமிருந்து மனுதாரரால் கிரையம் பெற்றப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் கிரையம் பெற்ற சொத்தில் மனுதாரரால் வீடு கட்டப்பட்டு, மேற்படி சொத்திற்கு மனுதாரர், எதிர்மனுதாரர் இருவரும் பொதுகுடும்பமாக இருந்தபோதே கிராம வழக்கப்படி பாதை ஒதுக்கப் பட்டுள்ளதாகவும், மேற்படி பாதை எதிர்மனுதாரரால் அபகரிக்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தரப்பு வழக்கு அமைந்துள்ளது . எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரின் மனுவினை ஆட்சேபித்து எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை..

8. மனுதாரர் தரப்பில் வழக்கு சொத்தின் பாதை வழி வசதி உரிமை எதிர்மனுதாரரால் அபரிக்கப்பட்டுள்ளதாகவும், வழக்கு சொத்திற்கு சென்று வர வேறு பாதை இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளது . வழக்கில் சரியான தீர்வு காண தாவாச் சொத்தின் அமைப்பு, இயற்பியல் தோற்றம், நிலவியல் அமைப்பு மற்றும் பாதை பாத்தியம் ஆகியவற்றை அளந்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியது அவசியம் என்றும் , தாவாச் சொத்திற்கு அருகில் உள்ள பாதைகள் குறித்தும் அறிய வேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது . மேலும், நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வது அசல் வழக்கில் தேவையில்லாத வாய்மொழி சாட்சியங்களை குறைப்பதற்கு உதவும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது . எனவே, மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

9. எனவே, இம்மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் ஆணையராக வழக்கறிஞர் **திரு.R.சரவணன்,B.A.,B.L.,MS.No.**1996/2004 அவர்களை நியமித்து உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையருக்கு மனுதாரர் ரூ.5,000/- நேரடியாக உத்தரவு தேதியிலிருந்து இரண்டு வார காலத்திற்குள் செலுத்தி அதற்கான குறிப்பாணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. தவறும்பட்சத்தில் மனு தாமாக தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

10. மேலும், நீதிமன்ற ஆணையர் இருதரப்பினருக்கு அறிவிப்பு சார்வு செய்து , கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் உதவியுடன் , மனுதாரர், எதிர்மனுதாரர்கள் ஆவணங்களை கொண்டு , தாவா சொத்துக்கள், பொதுபாதை என்று சொல்லக்கூடிய இடத்தை வருவாய் ஆவணங்களுடன் ஒப்பிட்டும் , மனுதாரர் இடத்திற்கு அருகில் உள்ள இடத்தின் வருவாய் ஆவணங்களை ஒப்பிட்டும் , கிராம கணக்கு ஆகியவற்றை பரிசீலினை செய்து , அளவீடு செய்தும் , இயற்பியல் தோற்றத்தை பார்வையிட்டும் , அறிக்கை மற்றும் வரைபடம் சமர்பிக்க இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை, அழைக்க. 31.07.2025

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து –தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு , அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு , என்னால் சரிபார்க்கப்பட்டு , பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 17.07.2025 திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.07.17 17:33:50 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**

**பின் இணைப்பு:**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் :** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:** இல்லை

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.07.17 17:33:56 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**